ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

முதல்பத்து

______________

## 7-ஆம் திருமொழி - மாணிக்கக்கிண்கிணி

______*_______

* மாணிக்கக்கிண்கிணியார்ப்ப மருங்கின்மேல் *
ஆணிப்பொன்னால்செய்த ஆய்பொன்னுடைமணி *
பேணிப்பவளவாய் முத்திலங்க * பண்டு
காணிகொண்டகைகளால்சப்பாணி கருங்குழல்குட்டனே! சப்பாணி. (1)

பொன்னரைநாணொடு மாணிக்கக்கிண்கிணி *
தன்னரையாடத் தனிச்சுட்டிதாழ்ந்தாட *
என்னரைமேல்நின்றிழிந்து உங்களாயர்தம் *
மன்னரைமேல்கொட்டாய்சப்பாணி மாயவனே! கொட்டாய்சப்பாணி (2)

பண்மணிமுத்தின் பவளம்பதித்தன்ன *
என்மணிவண்ணன்! இலங்குபொற்றோட்டின்மேல் *
நின்மணிவாய்முத்திலங்க நின்னம்மைதன் *
அம்மணிமேல்கொட்டாய்சப்பாணி ஆழியங்கையனே! சப்பாணி (3)

தூநிலாமுற்றத்தே போந்துவிளையாட *
வானிலாஅம்புலீ! சந்திரா! வாவென்று *
நீநிலாநின்புகழா நின்றஆயர்தாம் *
கோநிலாவக்கொட்டாய்சப்பாணி குடந்தைக்கிடந்தானே! சப்பாணி (4)

புட்டியில்சேறும் புழுதியும்கொண்டுவந்து *
அட்டியமுக்கி அகம்புக்கறியாமே *
சட்டித்தயிரும் தடாவினில்வெண்ணெயும்உண் *
பட்டிக்கன்றே! கொட்டாய்சப்பாணி பற்பநாபா! கொட்டாய்சப்பாணி (5)

தாரித்துநூற்றுவர் தந்தைசொல்கொள்ளாது *
போருய்த்துவந்து புகுந்தவர்மண்ணாள *
பாரித்தமன்னர்படப் பஞ்சவர்க்கு * அன்று
தேருய்த்தகைகளால்சப்பாணி தேவகிசிங்கமே! சப்பாணி (6)

பரந்திட்டுநின்ற படுகடல்தன்னை *
இரந்திட்டகைம்மேல் எறிதிரைமோத *
கரந்திட்டுநின்ற கடலைக்கலங்க *
சரந்தொட்டகைகளால்சப்பாணி சார்ங்கவில்கையனே! சப்பாணி. (7)

குரக்கினத்தாலே குரைகடல்தன்னை *
நெருக்கிஅணைகட்டி நீள்நீரிலங்கை *
அரக்கர்அவிய அடுகணையாலே *
நெருக்கியகைகளால்சப்பாணி நேமியங்கையனே! சப்பாணி. (8)

அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய் *
உளந்தொட்டிரணியன் ஒண்மார்வகலம் *
பிளந்திட்டகைகளால்சப்பாணி பேய்முலையுண்டானே! சப்பாணி (9)

@ அடைந்திட்டுஅமரர்கள் ஆழ்கடல்தன்னை *
மிடைந்திட்டுமந்தரம் மத்தாகநாட்டி *
வடம்சுற்றி வாசுகிவன்கயிறாக *
கடைந்திட்டகைகளால்சப்பாணி கார்முகில்வண்ணனே! சப்பாணி (10)

* ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை *
நாட்கமழ்பூம்பொழில் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
வேட்கையால்சொன்ன சப்பாணிஈரைந்தும் *
வேட்கையினால் சொல்லுவார் வினைபோமே. (11)

அடிவரவு : மாணிப் பொன் பன் தூநிலா புட்டி தாரித்து பரந்து குரக்கினம் அளந்து அடைந்து ஆட்கொள்ளத் தொடர்.

---